# அவசரக்கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் அவசரக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் டிசம்பர் மாதம் **15.12.2021–ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று, கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பொருள் எண் : 1**

இயக்குநர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோவை அவர்களின் கடிதம் ந.க.எண். 276 / 2020 / அ2, நாள். 08.12.2021–ல் நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய 2021-2022–ஆம் ஆண்டிற்கான ஆண்டு சந்தா தொகை ரூ. 30,000/–ம் செலுத்தத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி சந்தா தொகையை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 943 / 2020 / சி1)

**தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள் எண் : 2**

சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் W.P No. 24884 / 2021-ல் திருமதி. டி. ராதாமணி என்பவரால், வெள்ளகோவில் நகராட்சியில் நிரந்தர தூய்மைப் பணியாளர் பணியிடம் வேண்டி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். இவ்வழக்கில் ஆணையாளர், வெள்ளகோவில் நகராட்சி அவர்களை 3–வது எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டு உள்ளது. மேற்படி வழக்கினை வெள்ளகோவில் நகராட்சி சார்பாக வாதிட திரு. வி. மனோகரன், அரசு கூடுதல் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டுள்ளதின் அடிப்படையில் மேற்படி வழக்கு தொடர்பான எதிர்வாதுரை தயார் செய்து USR நெம்பர் பெற்று வழங்க தெரிவிக்கப்பட்டதில் வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/-க்கான கேட்பு அறிவிப்பினை சமர்பித்துள்ளார். எனவே மேற்படி திரு. வி. மனோகரன், அரசு கூடுதல் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.15,000/–க்கான காசோலை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 973 / 2013 / சி1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 3**

தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப மின்னணு சேவை வழங்கல் விதிகள் 2016 (Tamilnadu Information Technology, Electronic Service Delivery Rules 2016) விதி 5, துணை விதி (1)–ன் மூலம் வெள்ளகோவில் நகராட்சியின் கீழே குறிப்பிட்டுள்ள சேவைகள், அட்டவணையில் தெரிவித்துள்ளபடி, மின்னணு சேவை விநியோக (Electronic Service Delivery System) அமைப்பின்கீழ் https://tnurbanepay.tn.gov.in/ என்ற இணையதளம் வாயிலாக வழங்கப்படுகிறது என்ற தகவல் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண். | மின்னணு முறையில் வழங்கக்கூடிய பொது சேவைகளின் பெயர் | | | சேவையை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட அதிகாரி |
|---|---|---|---|---|
| 1 | 2 | | | 3 |
| 1 | குடிநீர் கட்டணம்<br>Water Charge | i | புதிய குடிநீர் இணைப்பு<br>New Water Connection | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | புதிய குடிநீர் இணைப்புக்கான கட்டணம்<br>Payment for New Water Supply Connection | நகராட்சி ஆணையாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தடையின்மை சான்றுக்கான விண்ணப்பம்<br>Apply for Noc / Clearance | i | திரைப்பட படப்பிடிப்புக்கான விண்ணப்பம்<br>Application for movie shooting | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | குடிநீர் இணைப்புக்கான தடையின்மை சான்று (தொழிற்சாலை)<br>Noc for Water Connection (Industrial) | நகராட்சி ஆணையாளர் |
| | | iii | திரைப்பட படப்பிடிப்பு கட்டணம்<br>Moview Shooting Payment | நகராட்சி ஆணையாளர் |
| | | iv | திரைப்பட படப்பிடிப்புக்கு தடையின்மை சான்று<br>NOC for Movie Shooting | நகராட்சி ஆணையாளர் |
| | | v | தொழிற்சாலை பயன்பாடு பாதாள சாக்கடை இணைப்புக்கான தடையின்மை சான்று<br>NOC for UGD Connection for Industrial | நகராட்சி ஆணையாளர் |
| 3 | சுகாதார சான்றிதழ்<br>Sanitary Certificate | i | சுகாதார சான்றிதழ்<br>Sanitation Certificate | நகராட்சி ஆணையாளர் |
| 4 | கட்டிட அனுமதி<br>Building Plan Approval | i | கட்டிட அனுமதி பணிக்கான முன்னேற்றம்<br>Building Plan Work Progress | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | கட்டிட அனுமதி இறுதி கட்ட பணிமுன்றேற்ற அறிக்கை<br>Building Plan Work Progress last story | நகராட்சி ஆணையாளர் |
| | | iii | வரி மதிப்பீட்டிற்கான நிறைவு அறிக்கை<br>Complete report for Tax Assessment | நகராட்சி ஆணையாளர் |
| | | iv | மனைப்பிரிவு அங்கீகார கட்டணம்<br>Layout Approval Payment | நகராட்சி ஆணையாளர் |
| | | v | மனைப்பிரிவு அங்கீகாரம் கோருதல்<br>Layout Approval Request | நகராட்சி ஆணையாளர் |
| | | vi | வேலை தொடங்குவதற்கான அறிவிப்பு<br>Notice for Commencement Work | நகராட்சி ஆணையாளர் |
| | | vii | கட்டிட இடிக்க அனுமதி<br>Permission for Demolition for Building | நகராட்சி ஆணையாளர் |
| | | viii | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமக் கட்டணம்<br>Planning Permission with Building License Payment | நகராட்சி ஆணையாளர் |
| | | ix | கட்டிட அனுமதிக்கான கட்டிட உரிமம் (1200 சதுர அடிக்கு கீழ்)<br>Planning Permission with Building License (Below 1200 sq.ft) | நகராட்சி ஆணையாளர் |
| | | xi | தொழில் வல்லுநர் / டெவலப்பர்களின் பதிவு<br>Registration of Professional Developers | நகராட்சி ஆணையாளர் |
| | | xii | தொழில் வல்லுநர் / டெவலப்பர்கள் சான்றிதழ் பிதிவு | நகராட்சி ஆணையாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | Registration of Professional / Developers Certificate | |
| | | xiii | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கோரிக்கை<br>Renewal Building Plan Request | நகராட்சி ஆணையாளர் |
| | | xiv | கட்டிட வரைபடம் புதுப்பித்தல் கட்டணம்<br>Renewal Building Plan Payment | நகராட்சி ஆணையாளர் |
| | | xv | தொழில் வல்லுநர்கள் / டெவலப்பரின் புதுப்பித்தல் பதிவு<br>Renewal Registration of Professional Developer | நகராட்சி ஆணையாளர் |
| | | xvi | இயந்திர உரிமத்திற்கான கோரிக்கை<br>Request for machinery License | நகராட்சி ஆணையாளர் |
| 5 | வர்த்தக உரிமம்<br>Trade License | i | தொழில் உரிமம் பதிவு தேடல்<br>Trade Registration Searh | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | தொழில் உரிமம் புதுப்பித்தல் தேடல்<br>Trade Renewal Search | நகராட்சி ஆணையாளர் |
| 6 | சொத்துவரி<br>Property Tax | i | வரிவிதிப்பு முழு விபரம்<br>View Assessment History | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | வரிவிதிப்பு விவரம் காண<br>View Assessment | நகராட்சி ஆணையாளர் |
| 7 | தொழில்வரி<br>Professional Tax | i | புதிய தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை<br>New Assessment request | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | தொழில்வரி விதிப்புக்கான கோரிக்கை மீள சமர்ப்பிப்பு<br>Return Submission | நகராட்சி ஆணையாளர் |
| 8 | பிறப்பு மற்றும் இறப்பு<br>Birth & Death | i | எனது சான்றிதழ்<br>My Certificate | நகராட்சி ஆணையாளர் |
| 9 | சாலை துண்டிப்பு<br>Road Cutting | i | சாலை துண்டிப்பு அனுமதி<br>Road Cutting Permission | நகராட்சி ஆணையாளர் |
| | | ii | சாலை துண்டிப்பு கட்டணம்<br>Road Cutting Payment | நகராட்சி ஆணையாளர் |

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்

(கோப்பு எண் : 1821 / 2021 / A1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 4</u>**

வெள்ளகோவில் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் துப்புரவு பணி செய்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி எண். K.Dis.No. 28369 / J3, நாள். 04.12.2018 அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் 221 ஆகும். ஆனால் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். குறைவான துப்புரவு பணியாளர்களே இருப்பதால் துப்புரவு பணி பாதிக்கப்படாமல் இருக்க இந்நகர்மன்ற தீர்மான எண். 355 / 2021, நாள். 18.11.2021–ன் படி 117 பேர் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் தனியார் மூலம் நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /- என்ற தினக்கூலி அடிப்படையில் இந்நகராட்சியில் 21 வார்டுகளிலும் துப்புரவு பணி செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.12.2021 முதல் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட பணி காலமானது 31.12.2021-ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திடமிருந்து 19.05.2021–ம் தேதிய கடிதத்தில் இப்பணி உத்திரவு ஒப்பந்த காலத்தை மேலும் ஓராண்டு காலம் நீடிப்பு செய்து தரவும் தற்பொழுது திருப்பூர் மாவட்ட ஆட்சியரின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 11.08.2020-ன்படி (2020-2021) ஆம் நிதியாண்டுக்கான தினக்கூலி அடிப்படையில் கணக்கிட்டு

ஊதியம் வழங்கவும் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் K.Dis.No. 28369/J3, நாள். 04.12.2018-ன்கீழ் பிறப்பிக்கப்பட்ட உத்திரவின் அடிப்படையில் தேசிய தாழ்த்தப்பட்டோர் நலவாரியத்தால் அவ்வப்பொழுது நடத்தும் ஆய்வு கூட்டத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்படுவதாலும் அந்தந்த நிதியாண்டிற்கு திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்பொழுது நிர்ணயம் செய்யும் தினக்கூலி தொகையுடன் EPF, ESI, சீருடை, பாதுகாப்பு உபகரணம், ஆயுள் காப்பீடு மற்றும் நிர்வாக கட்டணமும் கணக்கிட்டு ஊதியத்துடன் வழங்கவும், வெள்ளகோவில் நகராட்சியில் தற்பொழுது 18 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே உள்ளதால், இந்நகராட்சிக்குத் தேவையான துப்புரவு பணியாளர்களின் அளவுகோலில் (221 நபர்கள்) 10% குறைவாகவே உள்ளனர். நகராட்சியிலிருந்து பணியாளர்களுக்கு தற்பொழுது வழங்கப்பட்ட ஊதியமானது நகராட்சி வருவாயில் 49 % குறைவாகவே உள்ளது. எனவே காலியாக உள்ள துப்புரவு பணியாளர்கள் பணியிடம் போதுமானதாக இல்லாததாலும், அத்தியாவசியப் பணியான துப்புரவு பணி பாதிக்கப்படகூடாது என்ற காரணத்தாலும், ஒப்பந்ததாரர் திரு. M/s. துரை அன்கோ அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் தினக்கூலி நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 535 /–ஐ ஏற்க மன்ற அனுமதி வேண்டியும், தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், M/s. துரை அன்கோ விண்ணப்பத்தை ஏற்று மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.01.2022 முதல் 31.01.2022 வரை) 117 துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்திட காலநீட்டிப்பு செய்திடவும், ஏற்கனவே உள்ள நிபந்தனைகளுடன் வரும் காலங்களில் அரசிடமிருந்தும், நகராட்சியிலிருந்தும் பிறப்பிக்கப்படும் அனைத்து நிபந்தனைகளுடன் சேர்த்து 117 ஒப்பந்த துப்புரவு பணியாளர்களை விநியோகம் செய்ய கொரோனா நோய் தொற்று ஊரடங்கு அமலில் உள்ள காரணத்தால் ஒப்பந்த புள்ளி கோர இயலாது என்பதால் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

<u>அலுவலககுறிப்பு</u>

நகரின் தூய்மைப் பணி பாதிக்கப்படாமல் இருக்கும் நோக்கில் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு 01.01.2022 முதல் 31.01.2022 வரை ஒருமாதம் மட்டும் M/s. துரை அன்கோ நிறுவனத்திற்கு நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 469 / 2020 / எச்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 5</u>**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவிற்கு ஒப்பந்த அடிப்படையில் 2021-22–ம் ஆண்டுக்கு கனரக வாகனங்களை இயக்க 4 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.12.2021 முதல் இந்நகர்மன்ற தீர்மானம் எண். 356 / 2021, நாள். 18.11.2021–ன்படி ஒரு மாதத்திற்கு கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 31.12.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (சீருடை, பாதுகாப்பு உபகரணங்கள், ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.01.2022 முதல் 31.01.2022 வரை) நான்கு ஒப்பந்த கனரக ஓட்டுநர்கள் சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

<u>அலுவலககுறிப்பு</u>

பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள கனரக மற்றும் இலகுரக வாகனங்களுக்கு போதுமான ஓட்டுநர் இல்லாத காரணத்தின் அவசர அவசியம் கருதி நகரில் குப்பைகள் தேங்காவண்ணம் சுகாதாரமாக வைக்கவும், வெளிக்கொணர்வு மூலம் M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.01.2022 முதல் 31.01.2022 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 607 / 2018 / எச்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 6</u>**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் 2021 -22–ம் ஆண்டுக்கு கணினிகளை இயக்க 3 நபர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் ஒப்பந்ததாரருக்கு 01.12.2021 முதல் ஒரு மாதத்திற்கு இந்நகர்மன்ற தீர்மானம்

எண். 354 / 2021, நாள். 18.11.2021–ன்படி அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்து வழங்கிய வேலை உத்தரவு எதிர்வரும் 31.12.2021 –ம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் தற்போதைய ஒப்பந்ததாரரான M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் அவர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் ஊதியம் ஒரு நாள் ஒன்றுக்கு ரூ.595/–ஐ (ஆயுள் காப்பீடு தொகை மற்றும் EPF 13.61% உட்பட) ஏற்க மன்ற அனுமதி வேண்டியும் தொடர்ந்து இந்த நிறுவனத்தார் திருப்திகரமாக பணிகளை செய்து வருவதாலும், மேலும் ஒரு மாத காலத்திற்கு மட்டும் (01.01.2022 முதல் 31.01.2022 வரை) மூன்று ஒப்பந்த தட்டச்சர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு ஒரு மாத காலம் பணி நீடிப்பு உத்தரவு வழங்க மன்றத்தின் முடிவிற்கு.

<u>அலுவலககுறிப்பு</u>

இந்நகராட்சிக்கு தட்டச்சர்கள் பணிநியமனம் இல்லாததால், அவசர அவசியத்தினை முன்னிட்டு, 3 வெளிக்கொணர்வு பணியாளர்களை சப்ளை செய்ய M/s. துரை அன்கோ, ஜெயங்கொண்டம் நிறுவனத்திற்கு 01.01.2022 முதல் 31.01.2022 வரை நீட்டிப்பு செய்யலாம்.

(கோப்பு எண். 631 / 2018 / எச்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 7</u>**

வெள்ளகோவில் நகராட்சியில் 2021-22–ம் ஆண்டு பொதுநிதியின் கீழ் கீழ்காணும் பணிக்கு 30.11.2021-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. |
|---|---|
| திருப்பூர் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலக ஆய்வு கூடத்தில் புதியதாக ஒலிபெருக்கி அமைத்தல் (Wall speakers, Amplifier, Wireless headphones, Wireless Microphones, Free amplifier, Network cable and accessories) | 3,85,000 |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே திறக்கப்பட்டு ஒப்புநோக்கு செய்யப்பட்டதில் கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | Syscon systems, ஒப்பந்தாரர் | 0.20 % குறைவாக |
| 2) | Sagar Electronics, ஒப்பந்தாரர் | 3.47 % குறைவாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி விகிதம் அளித்துள்ள Syscon systems, ஒப்பந்தாரர், ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

Syscon systems, ஒப்பந்ததாரர், 0.20% மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். 1214 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 8</u>**

வெள்ளகோவில் நகராட்சி சந்தை வளாகத்தில் சிறப்பு சாலைகள் திட்டம் 2020-21–ன்கீழ் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதில் சாலை அமைக்கும் பணிக்கு இடையூறாக உள்ள மின்கம்பங்களை மாற்ற மின் வாரியத்திற்கு 25.08.2021 அன்று விண்ணப்பித்ததில் மின்கம்பத்தினை மாற்றியமைக்க மதிப்பீட்டு தொகை ரூ. 86,470 /–ஐ செலுத்த மின்வாரிய உதவி பொறியாளர், நகரம், வெள்ளகோவில் அலுவலக கோ.கட்டு எண் / அ.எண். 107 / 2021, நாள். 27.11.2021 கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகை ரூ. 86,470 /–ஐ சம்மந்தப்பட்ட மின்வாரிய அலுவலகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 535 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**பொருள் எண் : 9**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் **2020–21–ம்** ஆண்டில் எடுத்துக் கொள்ளப்பட்ட பணிகளுக்கு பணி முடிவு விவரம், முதல் தவணைத் தொகை பெறுவதற்கு Format 1, 2, 3 மற்றும் பணிமுடிவு விவரத்திற்கு தேவையான அனைத்து நகல்களும் மற்றும் Color photos இவை அனைத்தும் RDMA அலுவலகம் மற்றும் TUFIDCO அலுவலகம் ஆகிய இரண்டு அலுவலகத்திற்கும் **9** செட் புத்தகங்கள் வடிவில் அமைத்து சமர்ப்பித்ததற்கும் மற்றும் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தை புதிதாக கட்டுவதற்கு TUFIDCO சென்னை அலுவலகத்தில் விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பித்தல் தொடர்பாக District Map A0 size, Town map A0 size, Photo (HD) Printout மற்றும் வாரச்சந்தை மொத்த Area Plan ஆகியவை அனைத்தும் அமைத்து தருவதற்கு உண்டான செலவுத் தொகை ரூ. **47,175 /–** ஆகும். மேற்படி தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 2108 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 10**

வெள்ளகோவில் நகராட்சிக்கு 2021-2021–ம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 270.50 /- மதிப்பீட்டில் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தார்சாலை அமைக்கும் பணிக்கு 08.12.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1) | செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், சின்னமுத்தூர் |
| 2) | ஸ்ரீகணேஷ் லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா (பி) லிட்., ஒப்பந்ததாரர், முத்தூர். |

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் தொழில்நுட்ப உறை (Technical Bid) அன்றே திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டுக் குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப உறைகளும் தகுதி வாய்ந்ததாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 13.12.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி விலை உறை (Price bid) திறக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி பரிசீலனை குழுவால் பரிசீலனை செய்யப்பட்டதில், கீழ்காணும் விபரப்படி ஒப்பந்தப்புள்ளி விகிதம் பெறப்பட்டது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|
| 1) | செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர், சின்னமுத்தூர் | 4.95 % அதிகமாக |
| 2) | ஸ்ரீகணேஷ் லட்சுமி கன்ஸ்ட்ரக்சன் இந்தியா (பி) லிட்., ஒப்பந்ததாரர், முத்தூர். | 6.59 % அதிகமாக |

மேற்கண்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த **செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர்** மதிப்பீட்டைவிட அதிகமான விலை விகிதம் கொடுத்துள்ளதால், ஒப்பந்தப்புள்ளி விதிகளின்படி விலைகுறைப்பு செய்து தரக்கோரி செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண். 1149 / 2021 / இ1, நாள். 13.12.2021–ன் மூலம் கோரப்பட்டதில் ஒப்பந்ததாரர் மேற்கண்ட பணிக்கு மதிப்பீட்டை விட 4.95 **%** கூடுதலாக கொடுத்துள்ள விலை விகிதத்திலிருந்து குறைத்து செய்து தர இயலாது என தெரிவித்து கடிதம் கொடுத்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

செண்பகம் கன்ஸ்ட்ரக்சன், ஒப்பந்ததாரர் அவர்களின் (விலைகுறைப்பு கடிதத்தின்படி தெரிவித்துள்ள) 4.95 **%** மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கூடுதலாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

(கோப்பு எண். **1149** / **2021** / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 11**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2021-22–ன்கீழ் சாலைப்பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களின் கடிதம் ந.க.எண். 20543 / 2021 / பி2, நாள். 14.11.2021 மூலம் ரூ. 270.50 /- இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்று ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்

ந.க.எண். 1149 / 2021 / இ1, நாள். 22.11.2021 மூலம் Business standard ஆங்கில நாளிதழ் மற்றும் மாலை மலர் தமிழ் நாளிதழ் மூலம் விளம்பரம் வெளியிட்டமைக்கு பட்டியல் தொகை ரூ. 18,375 /- வழங்க Moulis Advertising Service Private Limited., பட்டியல் எண். 0000491, நாள். 30.11.2021 மூலம் பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி பட்டியல் தொகை ரூ. 18,375 /-ஐ சம்மந்தப்பட்ட நிறுவனத்திற்கு காசோலையின் மூலம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1149 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 12</u>**

வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட ஈரோடு ரோடு வாரச்சந்தை வளாகத்தில் மார்க்கெட்டுகளை மேம்படுத்துதல் திட்டத்தில் கடைகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு மற்றும் நிர்வாக அனுமதி கோரி கருத்துரு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள வாரச்சந்தை வளாகத்தில் மண்ணின் தன்மை குறித்து ஆய்வு செய்து சான்று வழங்க Coimabatore Institute Of Technology, Coimbatore நிறுவனத்திற்கு கடிதம் எழுதியதில் மேற்படி இடத்தினை ஆய்வு செய்து சான்று வழங்க ரூ. 62,790 /- செலுத்தக்கோரி பட்டியல் எண். CIT / CIVIL / SOIL / QUOTE / 022 / 2021-22, நாள். 27.11.2021 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை The Principal, Coimbatore Institute of Technology, Coimbatore என்ற பெயரில் வங்கி வரைவோலையாக செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி தொகையினை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1119 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 13</u>**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதார பிரிவில் வாரச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள MCC-ல் உள்ள மக்கும் குப்பை அரைக்கும் இயந்திரத்தில் கன்வேயர் பெல்ட் பழுதடைந்துள்ளதால் அதனை மாற்றி அமைத்து தருமாறு துப்புரவு மேற்பார்வையாளர் கடிதம் அளித்துள்ளார். மேற்படி பழுதினை சரிசெய்ய மதிப்பீடு ரூ. 67,000 /-க்கு பொறியாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பழுதினை சரிசெய்ய அங்கீகாரம் வேண்டி மன்றப்பொருள் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1965 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 14</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 19717 / 2021 / UPA, நாள். 12.11.2021–ல் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண். 69, நாள். 13.09.2021, அரசாணை (நிலை) எண். 347, நாள். 13.10.2021 மற்றும் அரசாணை (நிலை) எண். 96, நாள். 02.11.2021–ன்படி திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவில் நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள 15930 குடியிருப்புகளில் தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்பு திட்டத்தின்கீழ் பயனாளிகளை தேர்வு செய்ய கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு தகுதியான நபர்களை தேர்வு செய்து தனிநபர் வேலைக்கான அடையாள அட்டை வழங்கத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இத்திட்டத்தின் தொலைநோக்கு செயல்பாட்டின் அவசியத்தை கருதி, கணக்கெடுப்பு பணி மேற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் விபரங்களை கணினியில் பதிவேற்றம் செய்யும் பணி மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ. **30,000** /–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1756 / 2021 / எப்1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

## சாதாரணக்கூட்டம்

வெள்ளகோவில் நகராட்சியின் சாதாரணக்கூட்டம் 2021-ம் ஆண்டு பிலவ வருடம் டிசம்பர் மாதம் **30.12.2021–ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு** ஆணையாளர் / தனி அலுவலர் தலைமையில் நடைபெற்று, கீழ்காணும் பொருள்கள் குறித்து முடிவு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

**பொருள் எண் : 1**

நகராட்சிப் பொறியாளரின் 11.10.2021 நாளிட்ட அறிக்கையில் நகராட்சிக்குச் சொந்தமான தீத்தாம்பாளையம் வணிக வளாகக் கடை எண். 1,2,3,4–ற்கான கடை கட்டிடங்கள் கட்டி 30 வருடங்கள் கடந்துள்ளதால், கடைகளின் மேல்தளங்கள் சேதமடைந்து கம்பிகள் தெரியும் நிலையில் உள்ளதாலும், மழைநீர் உட்புகுந்து மேலும் சேதமடைந்து இடிந்து விழும் அபாயம் உள்ளதால், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடைகளை பராமரிப்பு பணிகள் செய்ய வேண்டியுள்ளதால், குத்தகைதாரர்கள் மற்றும் பொதுமக்கள் நலன் கருதி 31.12.2021 முதல் கடைகளை காலி செய்யவும், 01.01.2022 முதல் கடையின் குத்தகை உரிமத்தை ரத்து செய்யவும், 01.01.2022 முதல் 31.03.2022 வரை குத்தகை கேட்புத் தொகையினை கீழ்கண்டவாறு நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண். | கடையின் பெயர் / வரிவிதிப்பு எண் | 01.01.2022 முதல் 31.03.2022 வரை கேட்பு தொகை |
|---|---|---|
| 1 | தீத்தாம்பாளையம் கடை எண். 2 / 159/BD01/00004 | 1325 x 3 = 3975 |
| 2 | தீத்தாம்பாளையம் கடை எண். 3 / 159/BD01/00003 | 1325 x 3 = 3975 |
| 3 | தீத்தாம்பாளையம் கடை எண். 4 / 159/BD01/00008 | 1325 x 3 = 3975 |
| | **மொத்தம் நீக்கம் செய்யப்பட வேண்டிய கேட்புத் தொகை** | **11925** |

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1380 / 2021 / அ3)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 2**

வெள்ளகோவில் நகராட்சிக்குச் சொந்தமான கணபதிபாளையம் எரிவாயு தகனமேடையில் இயந்திரத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் இயக்க முடியாமல் உள்ளது. மேற்படி பழுதுகளை சரிசெய்ய மதிப்பீடு ரூ. 4,65,000 /–க்கு பொறியாளரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2238 / 2021 / இ1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 3**

வெள்ளகோவில் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் வீடு வீடாக சென்று டெங்கு தடுப்பு பணி மேற்கொண்டு வரும் DBC பணியாளர்களின் பணியை மன்ற அனுமதிக்காலம் 31.12.2021-ம் தேதியுடன் முடிவடைகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண். 1588 / ஜே1 / 2015 நாள். 16.10.2015 மற்றும் துணை இயக்குநர், திருப்பூர் அவர்களின் கடித ந.க.எண். 509 / அ2 / 2010, நாள். 07.10.2015ல் நகராட்சி பகுதிகளில் வீடு வீடாக சென்று டெங்கு காய்ச்சல் பரவமால் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள தற்காலிக பணியாளர்களை 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளரை நியமனம் செய்யவும் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் காய்ச்சல் கண்ட நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இருந்தால் அல்லது டெங்கு காய்ச்சல் என தெரிந்தால் உடனே அப்பகுதியில் அதிகமான DBC பணியாளர்களை நியமித்து 300 வீடுகளுக்கு 2 களப்பணியாளர்கள் நியமனம் செய்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் முன்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் தற்போது 19462 கட்டிடங்கள் உள்ளதால் 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் என்ற அடிப்படையில் 15964 வீடுகளுக்கு 53 தற்காலிக DBC களப்பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தலாம். ஆனால் தற்போது 48 பணியாளர்கள் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

வெள்ளகோவில் நகராட்சியின் பரப்பளவு 64.45 சதுரகி.மீ மற்றும் நகரில் மொத்தம் 19462 கட்டிடங்கள் (வீடுகள் 15964 , தொழிற்சாலைகள் 817, வணிக நிறுவனங்கள் 2644 மற்றும் கல்வி நிறுவனங்கள்) உள்ளது எனவும் அனைத்து பகுதி மற்றும் கட்டிடங்களை ஆய்வு செய்ய டெங்கு பணியாளர்கள் குறைவாக உள்ளதாலும் மொத்த கட்டிடங்கள் 19462/300 வீதம் 65 பணியாளர்கள் தேவைப்படுவதாக துப்புரவு ஆய்வாளர் தனது குறிப்பில் தெரிவித்துள்ளார்.

மேலும் தற்போது டெங்கு காய்ச்சல் தாக்கம் அதிகமாக உள்ளதாலும் நகரில் கடந்த மாதங்களில் பெய்த மழையினாலும் டெங்கு புழுக்கள் அதிக அளவில் உருவாவதை கட்டுப்படுத்தவும் பொதுமக்களின் நலன் கருதியும் ஏற்கனவே பணிபுரியும் 48 டெங்கு புழு ஒழிப்பு பணியாளர்களுடன் மேலும் 7 பணியாளர்களை கூடுதலாக பணியமர்த்தி மொத்தம் 55 நபர்களை கொசுப்புழு ஒழிப்பு பணியில் ஈடுபடுத்தலாம்.

எனவே இப்பணிக்கு 01.01.2022 முதல் 31.03.2022 -ந் தேதி முடிய இப்பணியினை மேற்கொள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர், அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 5453 / 2019 / உ3, நாள். 11.08.2020-ல் தெரிவித்துள்ள புதிய தினக்கூலி அடிப்படையில் வரிசை எண். 3–ல் மஸ்தூர் II ரூ. 400 /- அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் மஸ்தூர் II பணியாளர்களுக்கு நகராட்சி ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் ரூ. 350 /– என கூலி நிர்ணயம் செய்து 3 மாத காலத்திற்கு தற்காலிக DBC பணியாளர்களை நியமனம் செய்து பணிமேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 17,00,000 /- ஆகும். எனவே தற்காலிக DBC களப்பணியாளர்களின் பணிகாலத்தை 01.01.2022 முதல் 31.03.2022 வரை கால நீடிப்பு செய்யவும், இதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ. 17,00,000 /–ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண். 862 / 2015 / எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண் : 4**

வெள்ளகோவில் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு தளவாட சாமான்கள் வாங்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிய நிலையில் தளவாட சாமான்கள் பழுதடைந்தும் உடைந்தும் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் பொது சுகாதாரப்பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளவும் பொது சுகாதார நலன் கருதியும் கீழ்கண்ட விவரப்படி தளவாட சாமான்கள் மற்றும் பொது சுகாதார கிருமி நாசினி பொருட்கள் வாங்கி வழங்குமாறு இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் அவர்கள் கோரியுள்ளார்.

| வ.எண் | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | லைசால் | 100 லிட்டர் |
| 2 | சுண்ணாம்புத்தூள் | 3000 கிலோ |
| 3 | பைரத்திரம் | 90 லிட்டர் |
| 4 | டெமிபாஸ் | 100 லிட்டர் |
| 5 | மண்வெட்டி | 10 |
| 6 | ஈக்குமார் (குட்டு மார்) | 50 |
| 7 | ஈக்குமார் | 50 |
| 8 | சவுள் | 10 |
| 9 | அரிவாள் | 5 |
| 10 | குப்பை அள்ளும் கொக்கி சிறியது | 17 |
| 11 | குப்பை அள்ளும் கொக்கி பெரியது | 20 |
| 12 | சாக்கடை எடுக்கும் கொக்கி | 20 |
| 13 | பிக்காஸ் | 10 |
| 14 | குப்பை அள்ளும் கூடை | 20 |

எனவே மேற்படி பொருட்கள் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கான உத்தேச செலவினம் ரூ. 3 /–லட்சம் ஆகும்.

அலுவலககுறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண்.1803/2021/எச்1)

**தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது**

**<u>பொருள் எண் : 5</u>**

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி பேருந்து நிலையத்தில் இயங்கி வரும் அம்மா உணவகத்தில் சமையல் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் சமையல் உபகரணங்கள் பழுதடைந்து உபயோகிக்க முடியாத நிலையில் உள்ள சமையல் உபகரணங்களுக்கு பதிலாக புதிய சமையல் உபகரணகள் வாங்கி அம்மா உணவகத்திற்கு வழங்கிடவும் சமையல் எரிவாயு மூலம் இயங்கும் அடுப்பு மற்றும் ஸ்டீமர் பழுதடைந்து பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதால் அம்மா உணவக பணியாளர்களின் பாதுகாப்பு நலன் கருதி உடனடியாக சீரமைக்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. இதற்கு ஏற்படும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

(கோப்பு எண்.705/2014/இ1)

**<u>தீர்மானம் – அனுமதிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 6</u>**

நகராட்சி நிர்வாகத்தின் செயல்பாடுகள் வரிவசூல் மற்றும் இதர திட்டப் பணிகள் குறித்து அவ்வப்போது நகராட்சி நிர்வாகத்துறை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் காணொலி (Video Conference) முறையில் ஆய்வுக்கூட்டம் நடைபெற்று வருகிறது. மேற்படி ஆய்வுக்கூட்டம் தற்பொழுது ஆணையாளரின் அறையில் நடைபெறுவதால் போதிய இடவசதி இல்லாத காரணத்தால் அலுவலர்கள் ஆய்வுக்கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே புதியதாக காணொலி காட்சி அறை அமைக்கவும் (Video Conference) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. இதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 8,35,000 /– மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<u>அலுவலககுறிப்பு</u>

மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1890 / 2021 / இ1)

**<u>தீர்மானம் – அங்கீகரிக்கப்பட்டது</u>**

**<u>பொருள் எண் : 7</u>**

